முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 980

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

05.06.2022, ஞாயிற்றுக்கிழமை

1. பரபிரம்மமே அரங்கா வாழ்க
பாருலகை காக்க வந்த தேசிகா வாழ்க
வரம்பெற்று என் சக்தியாக
வாழுகின்ற வள்ளலே வாழ்கவாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் வைகாசி மாதம் 22 ம் நாள், 05.06.2022 ஞாயிற்றுக்கிழமை)
வையகத்தில் அரங்கன் தர்மமே பாதுகாப்பாய் நிற்கும்
வரம்பெற்ற அரங்கன் கொள்கையே வையகத்தை வழி நடத்திக்காக்கும்
3. காக்கின்ற மகா சக்தி அரங்கன்
கருணைகொண்டு இறங்கி தர்மத்தை
தேக்கமின்றி உலகோர்க்கு வாரி அருளிவர
தேசிகன் தொண்டு வழி இணைந்தவரெல்லாம்
4. எல்லோரும் ஞானியாவது உறுதியப்பா
எல்லோருக்கும் ஞான ஆட்சிக்கால வாய்ப்புகிட்டி
வல்லமைபட அவர்களெல்லாம் மரணமில்லா
வையகத்தில் மறுமை வென்று சிறக்க நேரும்
5. நேர்மைகொண்டு அரங்கன் தொண்டர்களாகி
நிலவுலகில் ஞானம் பயிலும் அனைவருக்கும்
வறுமை பசி பிணி பிற துன்பங்கள்
வாராத பாதுகாப்பு மிகுதி தந்து
6. தந்துமே ஆறுமுகப்பெருமான் யான்
தவமாக தர்மமாக தரணியில் சர்வ சூட்சுமமாக கலந்து அருள்புரிவேன்
அருளாக அரங்கன் சக்தியாக அகிலத்தில் எந்த கிளைகளெல்லாம்
ஆற்றல்பட ஞானிகள் பூஜை செய்து வருகின்றனரோ
7. வருகின்ற கிளைகள் அனைத்துமே
வருமுலகில் ஞான சபையாக மாறி
வையகத்தை வழி நடத்தும்
மகா சக்தி ஆகும்
8. ஆகவே கிளைகள் என அமைத்து
அரங்கன் பேரில் உயர் சேவை
பிழையற தொடரும் அன்பர்கள் அனைவருமே
பிரபஞ்சத்தில் ஞானியாவது உறுதிஉறுதி

9. உறுதி தந்தேன் இன்று அரங்கன்பால்
வரமாக உயர்தொண்டர்கள் வாராந்திரம் அரங்கனை சேவித்து
கருதியே தர்மத்தில் பொருளுதவி  செய்து
அரங்கன் கரம்பட ஞானதீட்சை ஏற்க

10. ஏற்பவர்க்கெல்லாம் சித்தி உறுதிஉறுதி
ஏற்று ஞானவழி தொடருபவரெல்லாம்
அற்புதம் கூடி இந்த கலியுகத்தில்
ஆவரப்பா அரங்கன் வழி ஞானிகளாக
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–